இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 03-09-2025

மேற்கு மண்டலத்துக்கு மோடி என்ன செய்யப் போகிறார்?

அமெரிக்க நாட்டின் வரிவிதிப்பானது தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தை கொந்தளிப்புக்கு உள்ளாக்கி இருக்கிறது.

"திருப்பூர், கோவையைக் காப்பாற்ற பா.ஜ.க. அரசே என்ன செய்யப் போகிறாய்?" என்ற கேள்வி எழுந்துள்ளது. "அதானி, அம்பானிக்காக அனைத்தையும் செய்யும் பிரதமர் மோடி, திருப்பூர் மற்றும் கோவையைக் காப்பாற்றச் செய்தது என்ன?" என்ற கேள்வி கிளம்பி இருக்கிறது.

அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி இனி செலுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இதனால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாவது தமிழ்நாட்டின் மேற்கு மண்டலம்தான்.

உலகம் முழுக்க பயணம் செய்கிறார் பிரதமர் மோடி. ஆனால் இந்தியா இன்று தனிமைப்பட்டு நிற்கிறது. இந்தியாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள அநியாய வரியைக் கண்டிக்க நாடுகள் இல்லை. அப்படியானால் இவரது பயணத்தால், இந்திய நாடு அடையும் பயன் என்ன?

அமெரிக்காவுக்கு பல தடவை சென்றுள்ளார். இன்னும் சொன்னால், அமெரிக்க அதிபராக டிரம்ப் வருவதற்கு பரப்புரையே செய்தார். அவரை இந்தியாவுக்கு அழைத்து வந்து விழா நடத்தினார். ஆனால் இன்றைக்கு அதிக வரி இந்தியா மீதுதான் விழுந்துள்ளது. 50 விழுக்காடு வரி என்பது எந்த நாட்டுக்கும் இல்லை. அமெரிக்கா தன்னுடைய முக்கியமான எதிரி நாடாகச் சொல்லும் சீனாவுக்குக் கூட இவ்வளவு இல்லை. இதைத் தட்டிக் கேட்க தைரியம் இருக்கிறதா? இல்லை. 'ஏன் இவ்வளவு அதிக வரிகள்?' என்று கெஞ்சிக் கேட்கவாவது முடிந்ததா என்றால் அதுவும் இல்லை.

ஜவுளிகள், துணிகள், ஆயத்த ஆடைகள், மீன், இறால், ரத்தினம், தங்க நகைகள், தோல்கள், காலணிகள், எஃகு பொருட்கள், அலுமினியம், இயந்திரங்கள், இயந்திரப் பொருட்கள் ஆகியவை இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு அதிகமாக ஏற்றுமதி ஆகிறது. இதில் தமிழ்நாட்டின் பங்கு அதிகம் ஆகும். அதிலும் குறிப்பாக கோவை, திருப்பூர்தான் அதிகமாக பாதிக்கப்படும்.

திருப்பூரில் ஆண்டுக்கு 70 ஆயிரம் கோடி மதிப்பிலான ஜவுளிப் பொருட்கள் உற்பத்தி ஆகிறது என்றால் அதில் 12 ஆயிரம் கோடி மதிப்பிலான ஜவுளிப் பொருட்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆவதாக புள்ளிவிபரங்கள் சொல்கிறது. டிரம்பின் வரி விதிப்பால் 5 லட்சம் தொழிலாளர்கள் திருப்பூரில் மட்டும் வேலை இழப்பார்கள். 3 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் மூடப்படலாம். இதன் ஒட்டு மொத்த இழப்பு 37 பில்லியன் டாலர்கள் என்று கணிக்கிறார்கள்.

அனைத்து பனியன் தொழிற்சங்கங்கள் கூட்டம் திருப்பூரில் நடந்துள்ளது. **"அமெரிக்க அதிபர் டிரம்ப், இந்தியாவின் ஏற்றுமதிக்கு 50 சதவீத வரி விதித்துள்ளார். இதனால் திருப்பூர் மாவட்டத்தில் இயங்கி வரும் பனியன் தொழில் மிகக் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகும். இத்தகைய வரி விதிப்பின் காரணமாக ஆயிரக்கணக்கான பனியன் தொழிற் சாலைகள் மூடப்பட்டு லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, உயர்ந்துள்ள வரிச் சுமைக்கேற்ப ஏற்றுமதிக்கான ஊக்கத்தொகை வழங்க வேண்டும். கார்ப்பரேட் வரியை உயர்த்துவதன் மூலமும், ரஷ்யாவில் இருந்து எண்ணெய் வர்த்தக வருமானத்தின் ஒருபகுதியை எடுப்பதன் மூலமாகவும் ஊக்கத் தொகைக்கான நிதியை திரட்ட இயலும்.**

ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி கடன் தேவையை பூர்த்தி செய்ய, அதிக வங்கி கடன்கள், அதற்கான உத்தரவாதம் அல்லது காப்பீடு மூலம் நிதி ஆதரவு வழங்க வேண்டும். வட்டியில் சலுகை, கடன் உதவி ஆகியவை அமெரிக்காவின் வரி தாக்கத்தினைக் கடந்து செல்லவும் சர்வதேச சந்தையில் போட்டியை சமாளிக்கவும் உதவும். பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தக வாய்ப்புகளை, கூடுதலாக ஏற்படுத்தி தர வேண்டும்." என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருப்பூர் பனியன் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் வங்கதேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஜவுளி ஆடைகளுக்கு வரி விதித்து உள்நாட்டு ஜவுளி வர்த்தகத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலை இழப்பால் வருமானம் இழக்கும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு உடனடியாக தொழிலாளர்களையும், தொழில்களையும் பாதுகாக்கின்ற வகையில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள்.

அமெரிக்க ஏற்றுமதிக்கான சரக்கு போக்குவரத்து, ஆறு நாட்களில், வெகுவாக சரிந்துவிட்டதாக, கன்டெய்னர் லாரி உரிமையாளர்கள் கவலை அடைந்துள்ளனர். இந்த வரி உயர்வால் ஏற்படும் இழப்பைத் தவிர்க்கும் நோக்கில், திருப்பூரைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள் தற்போது அமெரிக்காவிற்கு பின்னலாடைகளை தள்ளுபடி விலையில் ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளனர். அமெரிக்காவிற்கு மட்டுமே ஏற்றுமதி செய்யும் சில உற்பத்திப் பிரிவுகள் தங்களது உற்பத்தியையே நிறுத்திவிட்டன. இவற்றை உணர்ந்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னெச்சரிக்கை மணியை அடித்தார்.

மேற்கு மண்டலத்தைக் காக்க மோடி என்ன செய்யப் போகிறார்? பா.ஜ.க. மேற்கு மண்டலத்தை குறிவைத்து எப்போதும் செயல்படும் கட்சியாகும். மேற்கு மண்டலத்து மக்களது வாக்குகளைக் குறி வைக்கும் பா.ஜ.க., மேற்கு மண்டலத்துத் தொழில்களைக் காக்க என்ன செய்யப் போகிறது?

குஜராத் நகை ஏற்றுமதியாளர்களுக்கு மட்டும் ட்ராபேக் அதிகரிக்கப்பட்டு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டுத் தொழில்கள் கண்டுகொள்ளப்படவில்லை.

பின்னலாடை தொழிலைப் பாதுகாக்க சிறப்பு நிதி தொகுப்பை அறிவிக்க வேண்டும். அனைத்து மூலப்பொருள்களுக்கான இறக்குமதி வரியை நிறுத்தி வைக்க வேண்டும். பருத்திக்கு அறிவித்த தற்காலிக இறக்குமதி வரி விலக்கை நிரந்தரமாக்க வேண்டும். செய்வாரா பிரதமர்?

அமெரிக்க வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள திருப்பூர் பின்னலாடைத் தொழிலை காப்பாற்ற சிறப்பு நிதி தொகுப்பை உடனடியாக பிரதமர் அறிவிக்க வேண்டும். செய்வாரா பிரதமர்?

செஞ்சி ஒன்றியத்தில்

81 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தகவல்!

செஞ்சி, செப். 3 - விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஒதியத்தூர், கவரை, தச்சம்பட்டு, தாண்டவ சமுத்திரம், நல்லான்பிள்ளை பெற்றால் பொன்னங்குப்பம், ஜம்போதி ஆகிய ஊராட்சிகளில் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு மூன்றாம் கட்டமாக பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார் தலைமை தாங்கினார். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தரபாண்டியன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடு கட்டுவதற்கு 27 லட்சத்தி 2 ஆயிரத்து 400 ரூபாய் மதிப் பீட்டில் 10 நபர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவினை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏழை, எளிய மக்கள் குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள மக்களை கண்டறிந்து அவர்களும் பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளை தற்போது முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் புதிய தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளதையடுத்து செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் தற்போது 2 கோடியே 18 லட்சத்து 89 ஆயிரத்து 440 ரூபாய் மதிப்பீட்டில் 81 தொகுப்பு வீடுகள் புதிதாக கட்டப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அபிராமி, ராமதாஸ், பார்குணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ரவி, அய்யனார், ஹரி, குமரவேல், நந்தகோபால கிருஷ்ணன், தேவ கடாட்சம், நிர்வாகிகள் வாசு, செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னைக்கு வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களை நேற்று (2.9.2025) விமான நிலையத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசை ஒன்றிய அரசே பாராட்டுகிறது! எடப்பாடி பழனிசாமிக்குத்தான் பாராட்ட மனமில்லை!

பழனிசாமி மாய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்!

அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

சென்னை, செப். 3 - தமிழ்நாடு அரசின் திட்டங்களையும், செயல்பாடுகளையும் ஒன்றிய அரசே பாராட்டும் நிலையில், அவர்களது கூட்டணியில் இருக்கும் பழனிசாமிக்கு அதனை ஏற்க ஏன் மனமில்லை என்று அமைச்சர் தங்கம் தென்னரசு சாடினார். பழனிசாமி மாய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றும் விமர்சித்தார்.

தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டங்களின் செயலாக்கம் குறித்து விரிவாக விளக்கினார். திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நான்கரை ஆண்டுகளில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும், தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

ஒன்றிய அரசின் நிதி பங்களிப்பு இல்லாமல், இயற்கை பேரிடர்களை தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாக கையாண்டது என்றும் அவர் தெரிவித்தார். பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கத்தை எட்டி தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது என்றும், நாட்டிற்கே வழிகாட்டும் முன்னோடி மாநிலம் தமிழ்நாடு என்றும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

தொலைநோக்கு திட்டங்கள் செயலாக்கம் குறித்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, சிவசங்கர், கோவி. செழியன் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது: -

ஒன்றிய அரசின் நிதிப்பங்களிப்பு முறையாக இல்லாத நிலையில் கூட தமிழ்நாடு அரசு சிறப்பாக அதனை எதிர்கொண்டுள்ளது. நான்கரை ஆண்டுகளில் பல தொலைநோக்குத் திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இரட்டை இலக்க அளவில் வளர்ந்துள்ளது. வருவாய் பற்றாக்குறையும் குறைக்கப்பட்டு நிதிப் பற்றாக்குறையும் 3% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

ரூ.10.28 லட்சம் கோடி முதலீடுகள்!

பல்வேறு தேர்வாணயங்கள் மூலம் ஒரு லட்சம் பேருக்கு பணி வழங்கப்பட்டுள்ளது. உலக அளவில் தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூ.10.28 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 32.23 லட்சம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

52.07 மில்லியன் டாலர் அளவுக்கு நம் ஏற்றுமதி உயர்ந்துள்ளது. ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. 'காலை உணவுத் திட்டம்', 'விடியல் பயணம் திட்டம்' ஆகியவை மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. பல நெருக்கடிகளை தாண்டி மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

தி.மு.க.வின் 505 தேர்தல் வாக்குறுதிகளில் 364 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 40 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. மொத்தம் 404 திட்டங்கள் தற்போது செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஒன்றிய அரசிடம் 37 திட்டங்கள் நிலுவையில் உள்ளன. 64 திட்டங்கள் நடவடிக்கைக்கு எடுத்துக்கொள்ள முடியாதவையாக உள்ளன.

வேலூர், கரூர், ஓசூர், ராமநாதபுரம் ஆகிய நகரங்களில் புதிய விமான நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளோம். 3 லட்சம் பேருக்கு 'நான் முதல்வன்' உள்ளிட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் பணிகள் வழங்கப்பட்டுள்ளன. காலை உணவுத் திட்டத்தின் மூலம் மாணவர்களின் வருகை 9% உயர்ந்துள்ளது. மாணவர்கள் பள்ளிக்கு குறித்த நேரத்தில் வருவது 98% ஆக உயர்ந்துள்ளது. ரூ.6,000 கோடியில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 235 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடியல் பயணத்தில் தினசரி சராசரியாக 65 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். 3,700 புதிய பேருந்து வாங்கப்பட்டுள்ளன. 2,200க்கும் மேற்பட்ட பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் 45,000 கி.மீ. தொலைவிற்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 7,400 ஏக்கர் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ரூ.7,658 கோடி மதிப்பிலான கோயில் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. 4,500 விளையாட்டு வீரர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன. 76 சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 52,514 தொழிற்சாலைகள்!

உள்நாட்டு உற்பத்தியில் இரட்டை இலக்க வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளது. மின்னணு பொருள் ஏற்றுமதியில் முதலிடம், ஏற்றுமதி தயார் நிலை குறியீடு, தோல் ஜவுளி பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடம். மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கைகளிலும் பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 52,514 ஆக உயர்ந்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அமெரிக்காவில் ஹ்யூஸ்டன் பல்கலைக்கழகத்தில் 4 கோடி ரூபாயிலும், ஜெர்மனி நாட்டில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாயிலும், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் 5 கோடியே 39 லட்சம் ரூபாயிலும் தமிழ் இருக்கைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ. வேலு கத்தார் நாட்டில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் பக்கிரி பாளையத்தைச் சேர்ந்த நவாஸ் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியை வழங்கி ஆறுதல் தெரிவித்தார். சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் தர்மராஜ் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ. கிரி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.